[2015 மார்ச் 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர் அவர்கள்.*

**திரு. கே.பி.பி. பாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 101, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ரெங்கசாமி, மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**101—**

**விளையாட்டுக் கல்லூரி**

***22235 திரு. எம். ரெங்கசாமி:**

*மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூரில் விளையாட்டுக் கல்லூரி துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*தஞ்சாவூரில் அரசு விளையாட்டுக் கல்லூரி அமைப்பதற்கான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ரெங்கசாமி அவர்கள்.*

**திரு. எம். ரெங்கசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை விளையாட்டுத் துறையில் நாட்டின் முதன்மை இடத்திற்குக் கொண்டு செல்ல மகத்தான திட்டங்களைத் தந்துள்ள மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

2015 மார்ச் 31]

இளைஞர்களின் ஆற்றல், உடல் திறனை மேம்படுத்தி, எதிர்கால சமுதாயம் சிறந்தோங்கிட வழிவகுக்கும் வகையில் விளையாட்டுத் துறைக்கு எந்த அரசும் செய்திடாத வியத்தகு சாதனைகளை நிறைவேற்றித் தந்துள்ள, விளையாட்டுத் துறையின் விடிவெள்ளி மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள். சர்வதேச தரத்தில் நேரு உள் விளையாட்டு அரங்கம் அமைத்தும், சென்னை டென்னிஸ் போட்டி, சர்வதேச வாகையர் சதுரங்கப் போட்டி போன்றவற்றை ஏற்படுத்தியும், அதேபோல, சர்வதேசப் போட்டிகள், ஒலிம்பிக் போட்டி, ஆசிய விளையாட்டுப் போட்டி, காமன்வெல்த் போட்டி மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டி போன்றவற்றில் வெற்றி பெறுகின்றவர்களுக்குப் பரிசுத் தொகையை மிக அதிகமான அளவிலே உயர்த்தியும், இளைஞர்களையும், இளம் பெண்களையும் விளையாட்டுத் துறையின் பக்கம் ஈர்த்தும், அற்புத சாதனைகளைப் புரிந்திருக்கின்ற அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. தஞ்சை பகுதி, விளையாட்டுத் துறையிலே இயற்கையாகவே ஈடுபாடு அதிகம் உள்ள பகுதி. எனவே, விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுடைய திறனை ஊக்கப்படுத்தவும், அந்தப் பகுதி வீரர்களுடைய சாதனைகளை மேம்படுத்தும் வகையிலும் தஞ்சையிலே ஒரு விளையாட்டுக் கல்லூரியை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே விளையாட்டுத் துறைக்கென்று தமிழகத்தில் ஒரு விளையாட்டு பல்கலைக்கழகத்தை நிறுவியவர் மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இங்கே பெருமையோடு நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

உலக செஸ் போட்டியை சென்னையில் நடத்தி இந்தியாவிற்கு பெருமை சேர்த்தவர் மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதை இங்கே அன்போடு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஒலிம்பிக் போட்டியில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்களுக்கு 2 கோடி

ரூபாய் நிதியைக் கொடுத்து ஊக்கப்படுத்தி, இந்தியாவில் தமிழகத்தை முதல் மாநிலமாக்கிட பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துகின்ற மாண்புமிகு மக்களின் முதல்வரை தமிழகம் பெற்றிருப்பதோடு, இன்றையதினம் விளையாட்டுத் துறைக்கு தமிழக மக்கள் பெரிதும் ஆதரவு கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதையும் அன்போடு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழகத்தில் இதுவரை 11 கல்லூரிகள் சிறப்பான முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. தன்னாட்சி பெற்ற கல்லூரியாக சென்னையில் Y.M.C.A. கல்லூரியும், தன்னாட்சி பெற்ற கல்லூரியாக கோவையில் மாருதி கல்லூரியும், பெண்களுக்காக சேலத்தில் சாரதா அரசு உதவிபெறும் கல்லூரியும் சிறப்பான முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கூடுதலாக 8 விளையாட்டுக் கல்லூரிகள் மூலமாக விளையாட்டு வீரர்களை ஊக்குவிப்பதற்காகவும், விளையாட்டு ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கின்ற விதத்திலும் சிறப்பான நடவடிக்கையை தமிழகத்தில் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். இதுவரை எந்த இடத்திலும், இது தேவை என்று இந்தத் துறைக்கு கோரிக்கை வரவில்லை. ஆகவே, இன்றையதினம் விளையாட்டுத் துறையை தமிழகத்தில் ஊக்குவிக்கும் வகையில் இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக்கும் வகையில், பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துகின்ற மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு இந்தத் துறையின்மூலம் கோரிக்கைகள் வருகின்றபொழுது நிச்சயம் பரிசீலிக்கும் என்பதை அன்போடு இங்கே தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ரெங்கசாமி அவர்கள்.*

**திரு. எம். ரெங்கசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோரிக்கை வரப்பெறவில்லை என்று சொல்லியிருக்கின்றார்கள். இந்தக் கோரிக்கையை மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று தஞ்சையிலே விளையாட்டுக் கல்லூரி அவசியம் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.*

2015 மார்ச் 31]

இன்றைக்கு தஞ்சையில் Sports Hostel ஒன்றையும், 1½ கோடி ரூபாயிலே உள் விளையாட்டு அரங்கம் ஒன்றையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஏற்படுத்தித் தந்திருக்கிறது. அதற்கு அந்த மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், தஞ்சையில் இருக்கின்ற அன்னை சத்தியா உள் விளையாட்டு அரங்கத்தில் சர்வதேச தரத்திலான செயற்கைப் புல் ஹாக்கி விளையாட்டு மைதானம் ஒன்றையும், சர்வதேசப் போட்டிகளில் பங்குபெறும் அளவிற்கு திறமைபெறும் வகையிலே பளு தூக்குதல் மற்றும் உடற்பயிற்சிக் கூடம் ஒன்றையும், தடகளப் போட்டிகள் சிறப்பாக நடந்திட செயற்கை இரப்பர் ஓடுதளம் ஒன்றையும், சர்வதேச தரத்துடன்கூடிய கூடைப் பந்து, கைப் பந்து உள் விளையாட்டு அரங்கம் ஒன்றையும், 50-க்கு 25 மீட்டர் அளவிலான நீச்சல் குளம் ஒன்றினையும் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை அரசு சார்பில் விளையாட்டுக் கல்லூரிகள் ஏற்படுத்தப்படவில்லை. தமிழகத்தின் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள்தான் மக்களினுடைய பேராதரவைப் பெற்று, இந்தியாவிலேயே தமிழகத்தில் விளையாட்டு பல்கலைக்கழகத்தை சிறப்பான முறையில் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். 60 இலட்சம் ரூபாய் செலவில் Sports Hostel தஞ்சாவூரில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. செயற்கைப் புல் ஹாக்கி விளையாட்டு மைதானம் வேண்டுமென்றும், உடற்பயிற்சிக் கூடம் வேண்டுமென்றும் மாண்புமிகு உறுப்பினர் இங்கே கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்தான், வேலூரில் நடைபெற்ற காமன்வெல்த் போட்டியில் தங்கப் பதக்கத்தை வென்றனர். அதற்குப் பெருமை சேர்க்கும் வகையில் 20 ஆண்களும், பெண்களும் தனித்தனியாக சிறப்பான முறையில் பயிற்சி பெறுவதற்காக உடற்பயிற்சிக் கூடம் ஏற்படுத்த ஏழரை இலட்சம் ரூபாய் நிதியை

ஒதுக்கியிருக்கின்றார்கள். இன்றையதினம், இந்தியாவில் எங்குமில்லாத அளவிற்கு சென்னையில்தான் உலகத்தரம் வாய்ந்த கட்டமைப்புகளோடு, நீச்சல் குளம், ஹாக்கி மைதானம், டென்னிஸ் மைதானம் அனைத்தும் போற்றத்தக்க வகையில் செயல்படுகின்றன. கால்பந்து மைதானம், நேரு விளையாட்டரங்கத்தில் சிறப்பான முறையில் மக்களின் பயன்பாட்டில் இருக்கிறது. மக்களுக்கு நீச்சல் பயிற்சி கொடுப்பதற்கு நீச்சல் குளங்கள் 50 x 25 மீட்டர் அளவில் மாவட்டத் தலைநகரங்களில் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வரக்கூடிய காலங்களில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கோரிய அனைத்து வசதிகளுடன் விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்மூலம் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள S.D.A.T. மைதானம் சிறப்பான முறையில் பராமரிக்கப்படும் என்ற உத்தரவாதத்தை இந்த அவையின்மூலம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு வழங்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.

**திரு. டி.ஆர்.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களின் பெருமை வாய்ந்த மன்னார்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இளைஞர்கள் அனைவரும் தவறான வழியில் செல்லாமல் இருக்கவும், அவர்களின் உடல் ஆரோக்கியமாக இருக்கவும் கடந்த 2013 ஆம் ஆண்டிலேயே பல இடங்களில் உடற்பயிற்சி மையங்கள் அமைப்பதற்காக தலா 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கியிருந்தேன். குறிப்பாக, தளிக்கோட்டை, பொதுக்குடி, நெடுவாக்கோட்டை, திருமக்கோட்டை, உள்ளிக்கோட்டை, இடையர்நத்தம், எடகீழையூர், பரவாக்கோட்டை, மகாதேவப்பட்டினம், நீடாமங்கலம் பேரூராட்சி வார்டு-2, காமராஜர் காலனி போன்ற பல இடங்களில் உடற்பயிற்சி மையம் அமைப்பதற்காக நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. இதுவரை இதற்கான A.S. வழங்கப்படவில்லை. உபகரணங்களும் வழங்க முடியாது என்று அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது ஒரு முக்கியமான வேண்டுகோள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிச்சயமாக இதில் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். வேலூரில் விளையாட்டு வீரர்கள் பலர் இருக்கிறார்கள் என்று நீங்களே சொல்லியிருக்கிறீர்கள்.

ஆனால், அதைவிட அதிகமாக எங்கள் மன்னார்குடி பகுதியில், கபடி, வாலி பால் போன்ற விளையாட்டுகளில் இந்திய அளவில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சிறந்த வீரர்கள் பலர் இருக்கிறார்கள் என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக்கூடத் தெரியும். எங்கள் தொகுதிக்கு நான் ஏற்கெனவே ஒதுக்கிய நிதியையே நிச்சயமாக நீங்களும் பரிந்துரை செய்து, செயல்படுத்துமாறு கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு ஒரு நிகழ்ச்சியை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஒரு திட்டத்தைப் போடுகின்றபோது, அந்தத் திட்டம் மக்களுக்குப் பயன்பட வேண்டுமென்று ஆராய்ந்து திட்டமிட வேண்டும் என்பதை ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேண்டும். கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் ஐந்து இலட்சம் ரூபாய் மட்டும் கொடுத்தீர்கள். ஆனால், ஐந்து இலட்சம் ரூபாயில் உடற்பயிற்சிக் கூடத்திற்கான உபகரணங்களை வாங்கியபின், யார் அதைப் பராமரிப்பது, யார் திறந்து வைப்பது, யார் பூட்டுவது என்கிற எண்ணம் இல்லாமல், சட்டமன்ற உறுப்பினர்கள் உடற்பயிற்சிக் கூடத்தை எந்த இடத்திலும் அமைத்துக்கொள்ளலாம் என்று ஒரு சட்டம் போடப்பட்டது. உடற்பயிற்சிக் கூடம் அமைக்க ஐந்து இலட்சம் ரூபாய் வீதம் 113 சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கிய நிதி மக்களுக்குப் பயன்படாமல் அது பூட்டிக்கிடந்த நிலைமைதான் கடந்த தி.மு.க. ஆட்சியில் இருந்தது என்பதை இங்கே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு நினைவுபடுத்த நான் கடமைப்பட்டிருக்கிறேன். உங்கள் ஆட்சியில் 113 சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் முதல்கட்டமாக ரூபாய் ஐந்து இலட்சம் வழங்கப்பட்டது. ஆனால், அந்த உடற்பயிற்சிக் கூடத்தை யார் திறந்து வைப்பது, யார் பராமரிப்பது என்பது சொல்லப்படவில்லை. உடற்பயிற்சி ஆசிரியரும் இல்லாமல் கடந்த காலங்களில் நீங்கள் திட்டமிட்டீர்கள் என்பதை மட்டும் இங்கே நான் உங்களுக்கு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

விளையாட்டு வீரர்கள் இருந்தால் மட்டும் போதாது. விளையாட்டு வீரர்களை அரவணைப்பதோடு, உடற்பயிற்சி பயிற்றுநரும் இருந்தால்தான் அந்தத் திட்டம் சிறப்பான முறையில் மக்களுக்குப் பயன்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று அன்போடு இங்கே சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கின்றேன். இன்றையதினம், இளைஞர்கள் தவறான வழியில் செல்கிறார்கள் என்று திராவிட முன்னேற்றக் கழக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கூறுவது வியப்பாக இருக்கிறது.

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:** அனைவரும் ஒன்று சேர்ந்து இளைஞர்களைத் திருத்துகின்ற, நல்வழிப்படுத்துகின்ற ஓர் அருமையான வழிமுறையை உருவாக்க வேண்டும் என்பதை மட்டும் ஒவ்வொருவரும் நினைக்க வேண்டும். ஆகவே, இளைஞர்களை நல்வழிப்படுத்துகின்ற வழிமுறையைத் திட்டமிடுகின்றபோதே, அந்தத் திட்டம் மக்களுக்குப் பயன்படுகிறதா, இளைஞர்களுக்குப் பயன்படுகிறதா என்பதை ஆராய்ந்து செயல்படுத்த வேண்டும். இன்றையதினம், மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் ஏழரை இலட்சம் ரூபாயை வேலூருக்குக் கொடுத்திருக்கின்றார்கள். (குறுக்கீடு) மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள், ஒவ்வொரு மாவட்டத் தலைநகருக்கும் 50 இலட்சம் ரூபாயை உடற்பயிற்சிக் கூடத்திற்காகக் கொடுத்திருக்கின்றார்கள். மீதம் இருக்கின்ற இடங்களில் உடற்பயிற்சிக் கூடம் ஆரம்பிக்கப்படும், அங்கே பயிற்றுநர்களும் நியமிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, மக்களுடைய நலன் கருதி, மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு சிறப்பான முறையில் இளைஞர்களை நல்வழிப்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 102, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.